பதிவு எண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 19] சென்னை: மார்கழி 9 (24—12—71) வெள்ளி வெளியூர்: மார்கழி 10 (25—12—71) சனி [இதழ்: 161

முஜிபுர் ரகிமான் மனைவிக்கு இந்திரா அழைப்பு

டாக்கா, டிச. 24—

இந்தியாவின் தனித் தூதர் டி. பி. தார், ஷேக் முஜிபுர் ரகிமானின் மனைவியைச் சந்தித்து இந்திரா காந்தியின் சொந்த அழைப்பைத் தெரிவித்தார்.

டில்லியில் தம்முடன் ஒரு வார காலம் வந்து தங்குமாறு திருமதி இந்திரா காந்தி, பீகம் முஜிபுர் ரகிமானுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

பீகம் ரகிமான் விரும்பினால், ஆஜ்மீர் தர்க்காவுக்குச் செல்லலாம என்றும் திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருந்தார்.

பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் தமிழகம்

[★]

பாதுகாப்பு நிதிக்கு அள்ளி வழங்குகிறார்கள் மக்கள்

மார்ச் மாதத்திற்குள் ரூ. 10 கோடி--இந்திரா காந்தியை அழைத்துக் கொடுப்போம்

முதல்வர் கலைஞர் பெருமித அறிவிப்பு

சென்னை, டிச. 24—

தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கத்தின் சார்பில் பொது நல நிதி வழங்கு விழா நேற்று மாலை நடைபெற்றது; விழாவில் கலந்துகொண்ட முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், மின் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இருவருக்கு தலா ரூ 500 வீதமும், பணியாற்றுகையில் இறந்த ஆர். இலட்சுமியின் குடும்பத்தினருக்கு ரூ 750-ம பொதுநல நிதியிலிருந்து வழங்கினர்.

விழாவில் முதலமைச்சர் பேசுகையில், நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு என ரூ. 10 கோடியை அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் திரட்டி -- தலைமையமைச்சர் இந்திரா காந்தியைச் சென்னைக்கு வரவழைத்து அவரிடம் தமிழக மக்கள் சார்பில் கொடுக்க எண்ணியிருப்பதாகத் தெரிவித்தார்.

மார்ச் மாதத்திற்குள் நிதி திரட்டுவதற்கு மாவட்டங்களில் கலெக்டர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும், பாதுகாப்பு நிதிக்கென பரிசுச்சீட்டு அச்சடிக்கப்பட்டு வருகின்றன என்றும், அந்தப் பரிசுச்சீட்டுகளை மக்கள் வாங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

போர் வீரர்களுக்குத் தேவைப்படும் பொருள்களை அள்ளிக் கொடுக்க வேண்டும் -- என்று கேட்டுக்கொண்டதும், சென்னையில் ஒரே நாளில் ரூ. 2 இலட்சம் பெறுமானமுள்ள பொருள்களை மக்கள் அளித்துள்ளனர் என்றும் கூறினர்.

நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு அள்ளிக் கொடுப்பதில் தமிழக மக்கள் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தாம் சொல்லிக்கொள்ள இயலும் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுக் கூறினர்.

நிதி வழங்கு விழாவிற்கு ஏ. எம். இராசா எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன் விழாவில பேசுகையில், 'மின்சாரத் துறை ஊழியர்கள் தங்களது ஒரு நாள் ஊதியமான ரூ. 4.50 இலட்சத்தை தேசியப் பாதுகாப்பு நிதிக்குத் தருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்' என்றார்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் பேசுகையில், 'பொது நல நிதி' என்று அமைத்து -- மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும மின்கழக கணக்கர் சங்கத்தைப் பாராட்டினர்.

தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலிருக்கும் மின் துறை அமைப்புகளின் சார்பில் சுமார் ரூ. 6,000 தேசியப் பாதுகாப்பு நிதிக்கு முதலமைச்சரிடம் வழங்கப்பட்டது.

கணக்காயர் சங்க இணைச் செயலாளர் சு. இரமணன் அனைவரையும் வரவேற்றார்.

ஆற்காடு என். வீராசாமி எம் எல்.ஏ., சங்கத் தலைவர் இர. வெள்ளிங்கிரி, பொதுச்செயலாளர் ச. வெ. அங்கப்பன், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் வி. ரெ. கோவிந்தசாமி ஆகியோர் விழாவில் பேசினர்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கட்கு ஊதிய உயர்வு

சென்னை, டிச. 24—

சர்க்கரைக் ஆலைத் தொழிலாளர்களுக்கான இரண்டாவது ஊதியக் குழுவின் சிபாரிசுகள் தமிழ் நாட்டில 1969 நவம்பர் 1-ம் நாள் முதல் செயல்படுத்தப்படும்.

நிர்வாகம் -- தொழிலாளர் -- அரசாங்கப் பிரதிநிதிகள் கலந்து முத்தரப்புக் கூட்டத்தில் இது சம்பந்தமாக ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டது.

"ஊதிய பாக்கிகள் அடுத்த சனவரி 10-ம் நாளுக்குள் செலுத்தப்படும்" என்று அதிகாரபூர்வ பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

கூட்டுறவுத் தனியார் சர்க்கரை ஆலைகளும், ஒரு சங்கம் நீங்கலாக எல்லாத தொழிற்சங்கங்களும் இந்த முடிவுக்கு ஒப்புக்கொண்டன.

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

அறிவிப்பு

நாளை நமது அலுவலகத்துக்கு முறைவிடுமுறையால், 'நம் நாடு' அடுத்த இதழ் 27—12—71-ல் சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

5 மாநிலங்கட்கு ஒரே ஆளுநர்

ஷில்லாங், டிச. 24—

அசாம், நாகாலாந்து, மேகாலயா, மணிப்பூர், திரிபுரா ஆகிய ஐந்து வட கிழக்கு மாநிலங்களுக்கும் பொதுவாக ஓர் ஆளுநர் இருப்பார் என்று அதிகாரபூர்வமாகத் தெரியவருகிறது.

இப்போது அசாம் -- நாகாலாந்து -- மேகாலயா ஆளுநராக இருக்கும் பி. கே. நேருவே இந்த ஐந்து மாநிலங்களுக்கும் ஆளுநராக இருப்பார்.

ஐ. நா.-வின் ஆடம்பரச் செலவு

இரஷ்யா எதிர்ப்பு

நியூயார்க், டிச. 24—

ஐ. நா. நிறுவனத்தின் செலவினங்களைச் சுருக்கிச் 'சிக்கனமாக நிர்வாகத்தை நடத்த வேண்டும்' -- என்று பெரிய வல்லரசுகள் விடுத்த வேண்டுகோள்களை ஐ. நா. பொது சபை பொருட்படுத்தவில்லை.

ஏற்கனவே நிதிப் பற்றுக்குறையினால் ஐ. நா. திண்டாடிக் கொண்டிருக்கிறது.

ஆனால் 1972-ம் ஆண்டிற்கு ரூ. 160 கோடிக்கான வரவு -- செலவுத் திட்டத்தை ஐ. நா. பொது சபை அங்கீகரித்தது.

இரஷ்யா இதை எதிர்த்து வாக்கு அளித்தது; அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஆகிய மூன்று வல்லரசுகளும் வாக்கு அளிக்கவில்லை.

கழக முயற்சியால் ஏற்பட்ட நற்பலன்

அவசர நிலை பற்றிய அரசியல் சட்டத் திருத்த மசோதா தடுத்து நிறுத்தப்பட்டது

முதலில் ஆதரித்த சுதந்தராவும் இறுதியில் எதிர்க்க இசைந்தது

புதுடில்லி, டிச. 24-

சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் அவசர நிலையைப் பிரகடனம் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் கொண்டுவரப் படவிருந்த அரசியல் சட்ட (28-வது திருத்த) மசோதாவை மத்திய அரசு கைவிட்டு விட்டது.

எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து எதிர்த்ததன் பேரிலேயே இந்த மசோதாவை அரசு கொண்டுவரவில்லை.

நேற்று இந்த மசோதாவைக் கொண்டுவருவது பற்றி எதிர்க் கட்சித் தலைவர்களிடம் தலைமையமைச்சர் இந்திரா காந்தி சுமார் 90 நிமிடநேரம் கலந்துபேசினர்; அப்போது எதிர்க் கட்சியினர் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

நேற்று வரை இந்த மசோதாவுக்கு ஆதரவளித்துவந்த சுதந்தராக் கட்சியும் நேற்று அதனை எதிர்த்தது.

சுதந்தராக் கட்சியினரின் இந்த மாற்றத்துக்குக் காரணம் கழக உறுப்பினர்களேயாவர்; மக்களவை தி. மு. க. குழுத் துணைத் தலைவர் திரு. இரா. செழியன், நேற்று சுதந்தராக் கட்சித் தலைவர் தயாபாய் பட்டேலிடம் இம்மசோதாவால் ஏற்படக்கூடிய விபரீதங்களை விளக்கமாக எடுத்துக் கூறினர்.

குறிப்பாக இந்த மசோதாவின் ஒரு பிரிவு, அரசு நினைத்தால் ஒரு குறிப்பிட்ட மாநிலத்திலோ -- வேறு பகுதிகளுக்கோ அவசர நிலையை நீட்டித்துச் செல்ல வகைசெய்யப்பட்டிருப்பதை திரு. இரா. செழியன் எடுத்துக் காட்டினர்; அதனை சுதந்தராத் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

சுதந்தராக் கட்சியும் எதிர்க்கத் துவங்கியதும், இந்த மசோதா நாடாளுமன்ற மேலவையில் நிறைவேறுவது நிச்சயமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது; இதையும் கருத்தில்கொண்டே திருத்த மசோதா கைவிடப்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டு மாநிலங்களில் பொதுத் தேர்தல் நடத்த வசதி செய்யவே இப்படிப்பட்ட மசோதா கொண்டுவரப்படுவதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டது; ஆனால் அவசரநிலை நடைமுறையிலிருந்தாலும் தேர்தல் நடத்துவது பாதிக்கப்படாது என்று தி. மு. கழக உறுப்பினர் இரா. செழியன், தலைமையமைச்சரிடம் எடுத்துக் கூறினர்; 'அப்படித் தேவைப்பட்டால் அடுத்த பிப்ரவரி மாதத்தில இதுகுறித்து மறுபரிசீலனை செய்யலாம்' என்றும் செழியன தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில திரு. இரா. செழியன் அவர்கள் மேலும கூறியதாவது:—

"தற்போதைய நெருக்கடியால், தேசிய உணர்வு -- அனைவரும் ஒரே மனிதராய் எழுந்த உணர்வு உருவாக்கப்பட்டுள்ளது; இந்த அரிய உணர்வைப் பாழ்படுத்துவதால் பயன் ஏதும் இல்லை.

"ஒரு பகுதியில மட்டும் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்திவிட்டு, இந்தியாவின் மிச்சப் பகுதி மக்கள் துன்ப துயரங்களைப் பகிர்ந்துகொள்ளாவிடின், அந்த நிலைமை தேசிய ஒருமைப்பாட்டுக்கு எப்படி உகந்ததாக அமையும்?

"நாடாளுமன்றத்தில் தனக்கு இருக்கும் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு செயல்பட வேண்டாம்; அப்படிப் பிரச்சினையை அணுகினால், இந்தியா -- பாகிஸ்தான போரின்போது உருவான அனைத்துக் கட்சி ஒற்றுமைக்கு எதிராகவே அது முடியும்."

நெருக்கடி நிலை செயலிலிருக்கும்போது மாநிலச் சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடத்தப்படலாமா -- கூடாதா என்ற பிரச்சினையும் இக்கூட்டத்தில் எழுந்தது; உடனே இரா. செழியன் அவர்கள் கூறியதாவது:—

"தேர்தல் நடைபெறுவதில் தவறு ஏதுமில்லை; 1967-ல் நெருக்கடி நிலைச் சட்டம் செயலில் இருந்தபோதே தேர்தல் நடந்திருக்கிறது; அப்போது எந்தக் கட்சியும், அதனை, அநியாயம் என்றோ —பாதகம் என்றோ ஏதும் புகார் செய்யவில்லை.

"அவசியமானால், அவசர நிலையை நீடிப்பதுபற்றிய பிரச்சினையை வரும் பிப்ரவரியில் பரிசீலிக்கலாம்."

வங்க தேசத்துக்கு முதல் இரயில்

நாளை புறப்படும்

புதுடில்லி, டிச. 24—

இந்தியாவிலிருந்து வங்காள தேசத்துக்கு முதல் இரயில் வண்டி நாளை கல்கத்தாவிலிருந்து ஜெஸ்ஸுருக்குச் செல்லும்.

வங்க தேச அரசின் கோரிக்கையின்மீது கல்கத்தா--ஜெஸ்ஸுர்--குல்னா இரயில் பாதையைப் புதுப்பிக்கும் பணியை இந்திய இரயில்வே ஏற்றது.

ஜெஸ்ஸுர்வரை பாதை சீர்பட்டுவிட்டது; மாத இறுதியில் குல்னாவரை இரயில் போகும்.

உண்மையின் அடிப்படையில்தான் மேற்குப் பாகிஸ்தானுடன் சமாதானத் தீர்வு

'வங்காள தேசம் சுதந்தர நாடாக உருவாகிவிட்டது--- இன்னமும் அதுபற்றிப் பூட்டோ பேசுவதில் பயனில்லை'--

அமைச்சர் சுவரண் சிங் திட்டவட்ட அறிவிப்பு

இலண்டன், டிச. 24—

"நம் முன்பு உள்ள கண்கூடான உண்மையின் அடிப்படையில் மேற்குப் பாகிஸ்தானுடன் சமாதானத் தீர்வு காண்பதற்கு இந்தியா முன்வரும்; வங்காள தேசம் ஒரு சுதந்தர நாடாக உருவாகியிருப்பது, இந்தக் கண்கூடான உண்மை நிலைமைகளில் ஒன்று ஆகும்"

என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுவரண் சிங், இலண்டனில் செய்தியாளர்களிடம் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"மேற்குப் பாகிஸ்தானுக்கு மட்டுமே பூட்டோ தலைவராவார்; கிழக்கு வங்காளத்தில் (இப்போதைய வங்காள தேசத்தில்) நடைபெற்ற தேர்தலில், பூட்டோவின் கட்சிக்கு ஓர் இடம் கூடக் கிடைக்கவில்லை என்பதை உணருவது அவசியமாகும்.

"வங்காள தேசம் பாகிஸ்தானின் ஒரு பகுதி — என்று இன்னமும் பூட்டோ தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருந்தால் அவருக்குப் பெரும் சிக்கல்கள் ஏற்படக்கூடும்."

மேற்குப் பாகிஸ்தான் நினைவில் கொள்ளட்டும்

அமைச்சர் சுவரண் சிங் மேலும் கூறியதாவது :—

"ஜம்மு -- காஷ்மீர், இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகள் என்று இந்தியா கருதுகிறது; மேற்குப் பாகிஸ்தான், இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

"ஜம்மு -- காஷ்மீர் இந்தியாவின் பகுதிகளாகும் -- அவ்வாறே நீடிக்கும்; அவை தொடர்பாகப் பாகிஸ்தானுடன் எவ்விதத் தகராறும் இருப்பதற்கில்லை; 'இருக்கிறது' என்று கூறினால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கும் இல்லை."

அமெரிக்காவுடனன உறவு நிலை என்ன ?

"கண்கூடான உண்மை நிலைமைகளை அமெரிக்கா உணரும் போதுதான் அதனுடனன இந்தியாவின் உறவு நிலை மாறும்.

"இந்தியா -- பாகிஸ்தான் நிலவரம் பற்றிய அமெரிக்க மதிப்பீடு சரியானது அல்ல; பாரபட்சமான கண்ணோட்டத்திலேயே அமெரிக்கா இனியும் பிடிவாதமாக இருக்கும் என்று நாங்கள் கருதவில்லை; இந்த நிலை மாறினால்தான், அமெரிக்காவுக்கும் -- இந்தியாவுக்குமிடையே இப்போது நிலவும் முக்கியமான கருத்து வேறுபாடு மறையக்கூடும்.

"இந்தியத் துணைக்கண்டப் பகுதியைச் சேர்ந்த மக்களின் நலனுக்காக (அமெரிக்காவின்)தவற்றை மறந்து ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

பிரிட்டன் அங்கீகரிக்கும்

"ஒரு சுதந்தர நாடு என்ற வகையில், வங்காள தேசத்தைப் பிரிட்டன் அங்கீகரிக்கும் என நம்புகிறோம்."

ஐ. நா.-வில் வங்க தேசத்திற்கு இடம்

இந்தியா முயற்சிக்கும்

டாக்கா, டிச. 24 —

"ஐ. நா.-வில் வங்க தேசத்தைச் சேர்த்துக் கொள்ளுமாறு கோரும் முதலாவது நாடு இந்தியாவாக இருக்கும்; இந்நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்"

என்று இந்திய வெளிவிவகார அமைச்சகத்தின் கொள்கைத் திட்டக் குழுத் தலைவர் டி. பி. தார் கூறினர்.

இந்தியா தயங்காது

"இந்தியா -- இரஷ்யா நட்புறவு உடன்பாடு போன்று வங்க தேசத்துடன் பாதகாப்பு உடன்பாடு ஒன்றை இந்தியா செய்து கொள்ளுமா ?' என்று கேட்கப்பட்டபோது, 'இத்தகைய உடன்பாடு செய்துகொள்ள வங்க தேசம் விரும்பினால், அதற்கு இந்தியா தயங்காது' என்று தார் பதிலளித்தார்.

"இந்தியாவுக்கும் -- வங்க தேசத்துக்குமிடையே கலாச்சார உடன்பாடு எதுவும் தேவையில்லை; ஏனெனில், இரு நாடுகளின் பண்டையக் கலாச்சாரம் ஒரே மாதிரியானதாகும்; ஒரு காலத்தில் இரு நாடுகளும் ஒன்றாக இருந்தவையாகும்"

என்று அவர், கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

ரகிமான் விடுதலைக்கு இந்தியா முயற்சி

கேள்வி :— "ஷேக் முஜிபுர் ரகிமான் விடுதலைக்காக இந்தியா ஏதாவது முயற்சி செய்கிறதா ?"

பதில் :— "அதற்கான முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; உலக நாடுகளை இந்தியா வற்புறுத்தி வருகிறது."

டாக்காவில் தூதரகம்

"டாக்காவில் இந்தியத் தூதரகம் விரைவில் திறக்கப்படும்" என்றும் அவர் கூறினர்.

"பிப்ரவரி இறுதிக்குள் அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடும்" என்றும் சொன்னார்.

சீரமைப்புக்கு உதவி

"அண்டை நாட்டினராகவும் -- சகோதரராகவும் இருப்பதால் வங்க தேசத்தின் சீரமைப்புக்கான பொருளாதார உதவியை அளிப்பதற்கு இந்தியா ஆவலாக உள்ளது" என்றார்.

"உதவியின் அளவையும் -- தன்மையையும் தீர்மானிக்க இந்தியா வங்க தேசத் திட்ட அதிகாரிகளின் கூட்டுக் குழு செயல்படுகிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

"வங்க தேச விடுதலை வீரர்களின் சாதனையையும் -- தியாகத்தையும் உலகமே பாராட்டுகிறது" என்று தார் கூறினர்.

முக்கிய பொறுப்புக்கள் எல்லாம் பூட்டோ கையில்!

புதுடில்லி, டிச. 24—

"பாகிஸ்தான் அதிபர் பூட்டோவிடம், 'குடியரசுத் தலைவர்' என்ற முறையில் இருக்கும் பொறுப்புக்களைத் தவிர, வெளிநாட்டு விவகாரம் -- பாதுகாப்பு -- உள்நாட்டு விவகாரம் -- மாநிலங்கள் ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளின் பொறுப்பும் இருக்கும்" என்று பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

"இராணுவச் சட்ட நிர்வாகி' என்ற பொறுப்பைக் கூடிய விரைவில் பூட்டோ துறந்துவிடுவார் -- என்று பாகிஸ்தான் அரசாங்கம் அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஓய்வுபெறும் போர் வீரர்கள்

தொழிற்பயிற்சி பெறத் திட்டம்

புதுடில்லி, டிச. 22—

இந்தியப் போர்ப் படைகளைச் சேர்ந்த வீரர்கள் படைகளிலிருந்து ஓய்வு பெறுமுன், ஓராண்டுக் காலத்துக்கு அவர்களுக்கு இலவசத் தொழிற்பயிற்சி அளிப்பதற்காக வரையப்பட்டிருக்கும் திட்டத்துக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது.

போர் வீரர்கள் ஓய்வு பெற்றவுடன், கால இடைவெளியின்றி தொழிற்பயிற்சி துவக்கப்படும்.

தொழிற்பயிற்சி துவங்குவதற்கு முன்னதாகவே போர் வீரர்களுக்கு உரியதான விடுமுறை மற்றும் பிற வசதிகள் அளிக்கப்படும்.

பயிற்சிக் காலத்தில் அவர்கள் இராணுவ ஊழியத்தில் இருப்பதாகவே கருதப்பட்டு அவர்களுக்கு உரிய முழுச் சம்பளம் வழங்கப்படும்.

ஐ.நா. பேரவைக்குப் புதுச் செயலாளர்

ஆஸ்திரிய நாட்டுப் பிரதிநிதி வால்டீம் தேர்வு

ஐ.நா., டிச. 24—

ஐக்கிய நாடுகள் பேரவையின் நான்காவது பொதுச்செயலாளராக ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த டாக்டர் குர்த் வால்டீம் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அவருக்கு வயது 53.

டாக்டர் குர்த் வால்டீம், கம்யூனிஸ்டு நாடான ஆஸ்திரியாவில் உள்ள ஒரு கிராமத்தில் 1918-ம் ஆண்டில் பிறந்தார்; அவரது தந்தை ஓர் ஆசிரியராவார்.

இரண்டாவது உலகப் போரின் போது இரஷ்யாவுக்கும் -- இத்தாலிக்கும் ஆதரவாக (இட்லருக்கு எதிராக) வால்டீம் போரிட்டார்.

1955-ம் ஆண்டில், ஐ. நா. பேரவையின் ஆஸ்திரியா தூதர் ஆனார்; 1968-ம் ஆண்டில் ஆஸ்திரியா நாட்டு வெளிநாட்டுத் துறை அமைச்சரானார்.

இந்த (1971) ஆண்டுத் தொடக்கத்தில், ஆஸ்திரியா அதிபர் தேர்தலில் அவர் போட்டியிட்டார்; சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்; பிறகு, மீண்டும் ஐ.நா. பேரவைக்கே தூதராக வந்துவிட்டார்.

திருமணம் ஆன இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

ஆஸ்திரியா நாட்டில், 'எதிரி இல்லாத மனிதர்' என்று இவர் அழைக்கப்படுவது உண்டு; அந்த அளவுக்கு எல்லோரிடமும் நல்ல பெயர் எடுத்தவர்.

சிறைக் கைதிகளின் நாட்டுப் பற்று

திருவனந்தபுரம், டிச. 24—

இந்நகருக்கு அருகில் உள்ள நெட்டுக்கால் சேரி என்ற இடத்திலிருக்கும் திறந்தவெளிச் சிறையில் உள்ள 80 கைதிகள், பாதுகாப்பு நிதிக்கு ரூ. 618 அளித்ததன் மூலம், 'நாட்டுப் பற்றில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர்' என்று மெய்ப்பித்திருக்கிறார்கள்.

நாள்தோறும் இவர்களுக்கு 50 காசு ஊதியமாகும்; இதிலிருந்து சேர்த்த தொகையிலிருந்து இவர்கள் இந்த நன்கொடையை அளித்திருக்கிறார்கள்.

கிருஷ்ணன் குட்டி என்பவர் ரூ. 51-ம், அவருக்கு அடுத்தபடியாக தேவசியா என்பவர் ரூ. 50-ம், 64 வயது குன்னிராமன் என்பவர் ரூ 30-ம் அளித்திருக்கிறார்கள்.

இந்தச் சிறையின் அலுவலர்களும் ரூ 184 பாதுகாப்பு நிதிக்கு அளித்தார்கள்.

இனப் படுகொலைக்குக் காரணமாக இருந்த இராணுவ அதிகாரிகள்

விசாரணை செய்யத் தங்களிடம் ஒப்படைக்க வங்க தேச அரசு கோருகிறது

டாக்கா, டிச. 24—

"வங்க தேசத்தில் இனப் படுகொலைகளுக்குக் காரணமாக இருந்த இராணுவ அதிகாரிகளைப் போர்க் குற்றவாளிகளாக விசாரணை செய்யும் பொருட்டு ஒப்படைக்குமாறு இந்தியாவிடம் என்னுடைய அரசு கோரும்"

என்று வங்க தேசத்தின் தற்காலிகக் குடியரசுத் தலைவர் நஸ்ருல் இஸ்லாம் கூறினர்.

"சர்வதேச சட்டப்படி, நீதிமன்றம் ஒன்றின்மூலம் இத்தகைய நபர்கள் விசாரிக்கப்படவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"வங்காளி அறிஞர்கள் பலரைக் கொன்று குவித்த 'அல்பதார்' கட்சி உறுப்பினர்கள் -- ரஜாக்கர்கள் எவ்வாறு நடத்தப்படுவர் ?" என்று கேட்டதற்கு, 'அல்பதார்' தலைவர்களை கண்டிப்பாக விசாரிக்கப்போகிறோம்' என்றார்.

"ரஜாக்கர்கள் கைது செய்யப்படுவர்; ஆனால் இதற்காக ரஜாக்கர் வேட்டை இராது" என்றும் அவர் சொன்னர்.

"யாராவது குற்றமற்றவர் என்று தெரியவந்தால் அந்நபர் விடுவிக்கப்படுவார்" என்றும் அவர் கூறினர்.

வங்காளி அல்லாதவர்களைப் பற்றிக் கேட்டதற்கு அவர்கள்மீது தங்களுக்கு விரோதம் எதுவும் கிடையாது என்றும், வங்காளிகளைப் போன்று அவர்களும் வங்க தேசத்தில் தொடர்ந்து வாழலாம் என்றும் குறிப்பிட்டார்.

வங்க தேசம்--- இந்தியாவுக்கிடை ஒருங்கிணைந்த தொடர்பு

உரிய உதவிகள் பற்றி விரைவில் முடிவு

புதுடில்லி, டிச. 23 -

வங்க தேசத்தின் துணைக் குடியரசுத் தலைவரும -- அமைச்சர்களும் நேற்று டாக்காவுக்குச் சென்று நிர்வாகத்தைக் கவனிக்கும் வகையில் நேரடிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டனர்.

புதிய அரசின் தலைவர்களிடையேயும் -- இந்தியாவுக்கிடையேயும் ஒருங்கிணைந்த தொடர்பை ஏற்படுத்துவதற்கும், அவர்களுக்கு உதவி செய்யவும் இந்திய அதிகாரி டி. பி. தார் டாக்காவுக்குச் சென்றிருக்கிறார்.

வங்க தேசத்துக்கு எந்தெந்த வகையில் உதவி செய்வது என்பதை இந்தியா இன்னமும் தீர்மானிக்கவில்லை; ஐ. நா.-வுக்குச் சென்றிருக்கும் சுவரண் சிங் திரும்பிய பிறகு இது குறித்து முடிவெடுக்கப்படும்.

வங்க தேசத்தில் அமையும் அரசு இயங்கி நிலை நிற்பதைப் பொறுத்தே உலக நாடுகள் அதற்கு அங்கீகாரம் அளிக்க முன்வரக்கூடும்.

இந்தியத் துருப்புக்கள் தேவைக்குமேல் ஒரு நிமிடம்கூட அங்கு இருக்காது என்பதைப் பல தடவை இந்தியா திட்டவட்டமாகத தெரிவித்திருக்கிறது.

வங்க தேசத்துக்கு உதவுவதற்காக அனுப்பப்பட்டிருக்கும் இந்திய நிர்வாக - தொழில் நுட்ப ஊழியர்கள்கூட, தகுந்த ஆட்கள் கிடைக்கும் வரையில் அங்கு தங்கியிருப்பர்.

பொருளாதாரச் சீரமைப்புக்கு ரூ. 2,000 கோடி தேவைப்படுமாம்

வங்காள தேசத்தின் பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்குச் சுமார் ரூ 2,000 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்படுகிறது; அகதிகள் மறுவாழ்வுக்கான செலவு மதிப்பீடும் இதில் இடம் பெற்றிருக்கிறது.

டாக்காவில் சிவில் நிர்வாகம்-- முதல் கட்டம்

டாக்கா, டிச. 23—

வங்காள தேசத் தலைநகரான டாக்காவில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான பணியில் முதல் கட்டம் முடிவுற்றுவிட்டது.

டாக்காவிலுள்ள ஏழு 'தாணா'க்களிலும் இந்த வாரத்திலிருந்து வேலைகள் சொற்ப ஊழியர்களைக் கொண்டு தொடங்கிவிட்டன.

தலைநகரின் போலீசுப் படையில் இதுவரை 350 பேர் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

டாக்கா போலீசுப் படையைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டுவிட்டனர்; அல்லது பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக நகரைவிட்டு ஓடிவிட்டனர் என அதிகார வட்டாரத்தினர் கூறினர்.

பாகிஸ்தான் இராணுவத்தினரின் குண்டுகளுக்கு இரையாகாமல் தப்பி, கிராமப் பகுதிகளுக்குச் சென்றவர்கள் விரைவில் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய போலீசு டைரக்டர் -- ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள அப்துல் கலீக், பாகிஸ்தான் இராணுவத்தினரால் எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர் எனத் தம்மால் சொல்ல இயலாது எனக் கூறினர்; சென்ற 48 மணி நேரத்தில் 1,000 போலீசுக்காரர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர் என்றும் அவர் சொன்னர்.

அஞ்சல் அலுவலகங்கள்

அஞ்சல் பட்டுவாடாவுக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன; எல்லா பெரிய அஞ்சல் அலுவலகங்களிலும் வங்க தேச அஞ்சல் தலைகள் (ஸ்டாம்புகள்) விற்கப்படுகின்றன; பற்றுக்குறை உள்ள இடங்களில் பழைய அஞ்சல் தலைகள்மீது 'வங்க தேசம்' என்று வங்காளியிலும் -- ஆங்கிலத்திலும் முத்திரை குத்தி விற்கிறார்கள்.

அஞ்சல் அலுவலக சேமிப்புப் பாங்கிகளில் டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன; வாரத்துக்கு ரூ. 500 வரையிலும், மாதத்துக்கு ரூ 1,500 வரையிலும் எடுக்க அனுமதிக்கப்படுகிறது.

நதிப் போக்குவரத்துகள்

டாக்காவை பாரிசால் -- சாந்த்பூருடன் இணைக்கும் பாதை உள்பட 7 நதிப் போக்குவரத்துப் பாதைகளிலும், கப்பல்களும்-- மோட்டார் படகுகளும் ஓடத் தொடங்கிவிட்டன

இதற்கிடையே, வங்காள தேச அரசு மற்ற முக்கியமான பிரச்சினைகளில் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது; நிதி நிலைமை பற்றிப் பூர்வாங்கமாக மதிப்பிடும் வேலையில் நிதித்துறை ஈடுபட்டிருக்கிறது.

வங்காள தேசத்திலிருந்து தங்கம் -- வெள்ளி -- வைரம் நகைகள் கரன்சி நோட்டுகள் ஆகியவற்றை மேற்குப் பாகிஸ்தானுக்குக் கொண்டுபோகக் கூடாது என நிதித்துறை தடைவிதித்திருக்கிறது; அஞ்சல் மூலமோ--அல்லது பாங்கிகள் மூலமோ வங்காள தேசத்திலிருந்து மேற்குப் பாகிஸ்தானுக்கு பணம் அனுப்பக் கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாலாற்றில் புதிய பாலம்

வேலூர் -- காட்பாடி இடையே கட்டப்படும்

சென்னை, டிச. 23—

காட்பாடிக்கும் -- வேலூருக்கும் இடையே, பாலாற்றின்மீது புதிய பாலம் ஒன்று கட்டப்படும்.

இதற்கு ரூ. 57 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அங்கீகாரம் அளித்துவிட்டது; இன்னும் ஒரு வார காலத்திற்குள் கட்டுமானப் பணி துவங்கும்.

இத்தகவலை நெடுஞ்சாலை பொதுப் பணித்துறை மேற்பார்வை பொறியர் ஜ·ர்ஜ் ஜாகப் இங்கு நிருபர்களிடம் கூறினர்.

புதிய பாலத்தில் 25 அடி அகலமான சாலை இருக்கும்; 6 அடி அகலமுள்ள நடைபாதைகள் அமைக்கப்படும்.

இங்கு பாலாற்றின்மீது ஏற்கெனவே உள்ள பாலம் மிகவும் பழையதாகிவிட்டது; குறுகலாகவும் உள்ளது; எனவே, அதன் அருகிலேயே புதிய பாலம் கட்டப்படுகிறது.

இது கட்டப்பட்ட பிறகு பழைய பாலமும் தொடர்ந்து பயன்படுத்தப்படும்; மெதுவாகச் செல்லும் வாகனங்கள் அதில் செல்லும்.

வங்க தேச அகதிகளுக்கு ரூ.213 கோடி செலவு

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, டிச. 23—

கடந்த நவம்பர் மாதம் இறுதி வரையில், வங்க தேச அகதிகளுக்காக இந்திய அரசு, ரூ 213 கோடி செலவு செய்திருக்கிறது; இதில், ரூ. 194.57 கோடி மதிப்புக்கு உதவிகள் அளிப்பதாக உலக நாடுகள் உறுதியளித்துள்ளன; இதுவரையில், ரூ 73 கோடி மதிப்புள்ள ரொக்கம் -- பொருட்கள் கிடைத்துள்ளன"

என்ற தகவலை, மத்திய அரசின் அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சர் ஆர். கே. காடில்கார் தெரிவித்தார்.

1,30,000 பேர் திரும்பினர்

அமைச்சர் ஆர். கே. காடில்கார் மேலும் தெரிவித்தது :—

"வங்க தேசம் விடுதலை பெற்ற பிறகு 1,30,000-த்திற்கு மேற்பட்ட அகதிகள், இந்தியாவிலிருந்து தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிவிட்டனர்; மீதியுள்ளவர்களையும் திருப்பியனுப்புவதற்கு முறையான திட்டம் ஒன்றைக் கூடியவிரைவில் அரசு செயல்படுத்தும்.

"இந்த அகதிகளை மீண்டும் குடியமர்த்துவதற்குப் போதிய ஏற்பாடுகளைச் செய்ய வங்க தேச அரசுக்கும் சிறிது அவகாசம் தேவைப்படுகிறது"

மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு இல்லை

'இனி எல்லோருக்கும் தாராளமாகக் கிடைக்கும்' என அறிவிப்பு

புதுடில்லி, டிச. 24—

மண்ணெண்ணெய்ப் பங்கீட்டையும் -- கட்டுப்பாடுகளையும் கைவிடும்படி மாநில அரசுகளுக்கு மத்திய அரசு யோசனை கூறியிருக்கிறது.

மக்களவையில் பெட்ரோலியம் - இரசாயன அமைச்சர் பி. சி. சேத்தி இதை அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் வழக்கமான அளவு மண்ணெண்ணெயை அனுப்பி வைக்கும்படி எண்ணெய் நிறுவனங்களுக்கு உத்தரவு பிறக்கப்பட்டிருக்கிறது.

"வழக்கமாக ஏற்படும் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய அளவுக்குப் போதுமான எண்ணெய் இருப்பு இருக்கிறது; போதுமான எண்ணெய்ப் பல்வேறு பகுதிகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

"ஆனால் அதே சமயம், மண்ணெண்ணெயைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யாமல் நிறுத்திவைப்பது -- அதிக விலை கேட்பது -- மற்ற வகைகளில் துஷ்பிரயோகம் செய்வது ஆகியவைகளைப்பற்றி மாநில அரசுகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் மத்திய அரசு மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறது."

சிதம்பரம் நகர கூட்டுறவு வங்கி

கழகத் தோழர் தலைவராகத் தேர்வு

சிதம்பரம் கூட்டுறவு அர்பன் வங்கி இயக்குநராக சிதம்பரம் நகர தி. மு. கழகப் பொருளாளர் தோழர் துரை. பாலசுப்பிரமணியம் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் மூன்று ஆண்டுகள் பதவி வகிப்பார்.

அவரைக் கழகத் தோழர்கள் பலர் மாலை அணிவித்துப் பாராட்டினர்.

பணமழையில் நனைந்திடக் கனவிலும் தயங்காதீர்!

கொடுங்கள் ஒரு ரூபாய்! பெறுங்கள் ஒரு லட்சம்!!

ஒரு ரூபாய் கொடுத்து தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினால் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கலாம்... எனவே

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ. 50,000
10 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ. 50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ. 50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ. 1,00,000

மொத்தப் பரிசுகள் 4264.
மொத்தப் பரிசுத் தொகை ரூ. 14,00,000*



பரிசுச் சீட்டு ஒன்றின் விலை
ரூ. 1/-தான்
குலுக்கல் நாள்: 31-12-71

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 264 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2
*4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

இசைக் கலை வளர குருகுலக் கல்வி

கட்டுப்பாடும் --- ஒழுங்கும் பேண வலியுறுத்தல்

இசை விழாவைத் துவக்கி வைத்து முதலவர் கலைஞர் கருணநிதி விளக்கம்

சென்னை, டிச. 24—

"இசைத் துறையில் கட்டுப்பாடும் --- ஒழுங்கு முறையும் இருக்க வேண்டும்; அப்போதுதான், இசையின் தரம் குறையாது; நாமும் நல்லதோர் இசையைத் தொடர்ந்து ரசிக்க இயலும்.

"பண்டைக்காலக் கலையுலக மக்களுக்குக் குருவினிடத்தில் பக்தி செலுத்துகின்ற தன்மை இருந்தது; அந்தத் தன்மை, இன்று தலைகீழாக மாறிவிட்டது.

"மாணவர், ஆசிரியரிடம் பக்தி செலுத்தவேண்டிய நிலை மாறி -- ஆசிரியர்; மாணவரிடம் பக்தி செலுத்தவேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருப்பதால், இசையின் தரமும் தலைகீழாக மாறிவிட்டது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்திய நுண்கலைக் கழகத்தின் 39-வது ஆண்டு இசை விழாவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினர்.

இசை விழாவைபொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இசை மாநாட்டு நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கும் வித்துவான் முடிகொண்டான் வெங்கட்ராம அய்யருக்கு, 'சங்கீத கலா சிகாமணி' என்ற பட்டத்தையும் கலைஞர் வழங்கினர்.

இசை விழாவைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் அவர் கூறியதாவது:—

"இசைத் துறையின் தரம் குறைந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது அனைவரின் கடமையாகும்.

இசையில் தாளம் --லயம் -- ராகம் -- சுரம் போன்றவைகளுக்கு மொழி எதுவும் கிடையாது; பாடல்கள் உருவான பிறகுதான் மொழி பற்றிய பிரச்சினையே எழுகிறது.

தமிழ் மொழியிலும் நல்ல பல பாடல்களை இயற்றி நமக்குப் பல பெரியோர்கள் புகழ் ஈட்டித் தந்திருக்கின்றனர்.

இசை -- மனிதனின் அடிப்படைக் குணங்களை ஒட்டியே பிறந்தது என்று கருதப்படுகிறது; காட்டில் உள்ள மூங்கில் மரங்களில் வண்டுகள் இட்ட துளையில் அந்த பகுதியில் வீசிய தென்றல் காற்று புகுந்ததால் ஒலி ஏற்பட்டது; இந்த இனிய ஒலியைக் கேட்ட மனிதன், மூங்கில் குழாயில் துளைகளைப்போட்டு வாயால் ஊதி இசையை எழுப்பினன்.

முன்காலத்து மனிதர்கள் மிருகங்களைக் கொன்று அவற்றின் இறைச்சியை உண்ட பிறகு -- தோலை உண்ணமுடியாத காரணத்தால் -- அதை மரத்தில் கட்டிவைத்தனர்; மரத்தின் கிளை அந்தத் தோலின்மீது பட்டு எழுந்த ஓசையைக் கேட்ட மனிதன, தோலை ஒரு பொருளில் இறுகக் கட்டி -- அதன்மீது குச்சியால் தட்டி ஒலி எழுப்பினன்; அது, 'முரசாயிற்று' என்றும் கூறப்படுகிறது.

அகநானூறு போன்ற சங்க நூல்களில் கூட, இசையின் பெருமை புகழ்ந்து கூறப்பட்டுள்ளது; அப்படிப்பட்ட இசையை வளர்த்தே ஆக வேண்டும்.

இசை வளர நல்ல ரசிகர்கள் பெருக வேண்டும்; இசைக் கல்வி முறைக்குக் குருகுல முறையே சிறந்தது என்று இங்கு கூறப்பட்டது; அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். குருகுல முறை மூலம்தான் இசையில் நல்ல தேர்ச்சி பெற்ற கலைஞர்களை உருவாக்கலாம் என்பது சரியானதுதான்.

ஆனால் தற்போதுள்ள இசைக் கல்லூரி -- பள்ளிகள் மூலம், அவற்றில் படிப்பவர்கள் அனைவரையும் சிறந்த இசைக் கலைஞர்களாக உருவாக்க முடியாவிட்டாலும், ஒரு சில சிறந்த கலைஞர்களையும், இசை பற்றி நன்கு அறிந்து ரசிக்கப் பலரையும் உருவாக்கும் வாய்ப்பு இருப்பதையும் மறந்துவிடக் கூடாது.

குருகுல முறையில்உள்ள பயிற்சி முறைகளை அடிப்படையாகக் கொண்டு தற்போது உள்ள இசைக் கல்லூரிகளில் பயிற்சி அளிப்பது என்பது சிறந்த பயனைத் தரும்; இதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும்."

கூட்டுறவுச்சங்க இயக்குநர் தேர்வு

மாயூரம், டிச. 24—

மாயூரம் தாலுக்கா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி லிமிடெட் நிறுவனத்திற்குப் புதிய இயக்குநராக மாயூரம் நகரத் தி. மு. கழகச் செயலாளர் அ. செங்குட்டுவன் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தோழர் செங்குட்டுவனுக்கு என். கிட்டப்பா எம்.எல்.ஏ., ஜீ. கே. மூர்த்தி, கே. நாராயணசாமி ஆகியோர் மாலையணிவித்து வாழ்த்தினர்.

வங்காள தேசத்தை அங்கீகரிக்க நடவடிக்கை

அயல்நாட்டுத் தூதரகங்கள் தொடர்பு கொள்கின்றன

சீன — அமெரிக்கத் தூதரகங்களின் திண்டாடும் நிலை

புதுடில்லி டிச. 24—

வங்க தேசத்திலுள்ள அயல்நாட்டுத் தூதுவரகங்கள் அனைத்தும் இப்போது அந்நாட்டு அரசுடன் ஏதாவது ஒருவிதத்தில் தொடர்பு கொள்ளத் தொடங்கியிருக்கின்றன.

வங்க தேசத்தை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளின் முதற் படியாக இதனை நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஆனால் சீன—அமெரிக்கத் தூதரகங்கள் வங்க தேசத்தை மதிக்காமல் தங்கள் எல்லா தொடர்புகளையும் இந்திய இராணுவத் திட்டமே வைத்துக்கொள்ள முயற்சிக்கின்றன; ஆனால், அவர்களின் சொந்தப் பாதுகாப்புத் தவிர மற்ற எல்லாத் தொடர்புகளையும் வங்க தேச அரசிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்திய இராணுவ அதிகாரிகள் கூறிவிட்டனர்.

இரஷ்யா—பிரிட்டன்—பிரான்சு—ஜெர்மனி—ஜப்பான் தூதரகங்கள் இந்தச் சிக்கலை ஏற்படுத்திக்கொள்ளவில்லை; தங்களது வங்காளி ஊழியர்கள் வங்க தேச 'பாட்ஜு'களை அணிந்துகொண்டு வருவதை அவைகள் எதிர்க்காததுடன், எல்லாப் பிரச்சினைகளிலும் வங்க தேச அரசுடன் ஒத்துழைத்துச் செயல்படவும் முன் வருகின்றன.

ஆயினும், மேற்குப் பாகிஸ்தானுடனான உறவில் எவ்வித மாற்றமும் இல்லாத வகையில் இவைகள் செயல்படுகின்றன.

டாக்காவிலுள்ள இரஷ்யத் தூதுவர் நேற்று அவாமி லீக் தலைமைச் செயலகத்துக்குச் சென்று வங்க தேசம் விடுதலையடைந்ததற்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

வங்க தேசத்தில் பாகிஸ்தான் படை சரணடைந்ததற்குப் பிறகு நடைபெறும் முதல் வெளிநாட்டுத் தூதரக நடவடிக்கை இதுவேயாகும் என்று தெரியவருகிறது.

உலக நாடுகள் குழப்பம்

மேற்குப் பாகிஸ்தானில் புதிய அதிபர் பூட்டோவின் மின்னல் வேக நடவடிக்கைகளைப் பார்த்து உலகமே குழம்பிப் போயிருக்கிறது; 'கடந்த இராணுவ ஆட்சியில் உருவாகியது' என்று கருதப்படும் எல்லா வெறுப்புக்களையும் அகற்ற அவர் வேகமாகச் செயல்பட்டு வருகிறாராம்.

இதுவன்றி, தாம் எதையும் செய்ய அதிகாரம் படைத்திருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் இராணுவத் துறையில் பெரும் மாற்றங்களைச் செய்துவருகிறார்.

நேற்று வரை 13 இராணுவ ஜெனரல்களை அவர் பதவி நீக்கம் செய்திருக்கிறார்; இரண்டு அட்மிரல்களையும், ஏராளமான உயர்தர சிவில் அதிகாரிகளையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

பாகிஸ்தானில் ஆதிக்கம் செலுத்திவந்த 22 பணக்காரர்களைக் கட்டுப்படுத்தவும் அவர் நடவடிக்கை மேற்கொண்டார்; மன்னர்களுக்கான மானியத்தை ரத்து செய்திருக்கிறார்.

அவரது இந்தத் தீவிர நடவடிக்கைகள் எல்லாம் எதில் கொண்டுபோய் விடுமோ என்பதை யாராலும் கூற முடியாமலிருக்கிறது.

பூட்டோவின் புதிய வேடம்

சோஷலிசவாதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ள முயற்சி

புதுடில்லி, டிச. 24—

தனது சோஷலிசக் கொள்கைகளை வெளிப்படுத்தும் நடவடிக்கையாகப் பூட்டோ, பாகிஸ்தானில் முன்னாள் மன்னர்களின் மானியத்தை உடனடியாக ரத்து செய்வதாகத் திடீர் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார்.

சுமார் 70 முன்னாள் மன்னர்கள் அங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தைச் சீர்படுத்தும் நடவடிக்கையாக மேலும் பல உயர்தர அதிகாரிகளையும் அவர் பதவி நீக்கம் செய்திருக்கிறார்.

இவர்களில் கடற்படையின் தலைவரும், மூன்று முதிர்ந்த அட்மிரல்களும் இரண்டு கமாண்டர்களும் மூன்று மேஜர் — ஜெனரல்களும் அடங்குவர்.

பாகிஸ்தான் தேசியக் கப்பல் போக்குவரத்துத் தலைவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

பாகிஸ்தானுக்குப் புதிய நோட்டுகள் அச்சிடப்போவதாகவும் பூட்டோ அறிவித்தார்.

தூதரகத்தை மூடியது சீனா

புதுடில்லி, டிச. 24—

டாக்கா நகரில் உள்ள சீனத் தூதரகத்தை மூடிவிட சீன அரசு முடிவு செய்துள்ளதாகப் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

"கிழக்குப் பாகிஸ்தானில் இந்திய இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதை அடுத்து, சீனா இந்த முடிவைச் செய்துள்ளது" என்று அந்த வானொலி கூறியது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] (24, [illegible] தெரு, சென்னை-10) [illegible]

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன் நிகழ்ச்சி

டிச. 26 மாலை 6 மணி : கடலூர் — வங்க தேச விடுதலை விழா — இந்தியப் பாதுகாப்பு நாள் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளல்.

வீட்டுக் காவலில் முஜிபுர் ரகிமான்

பூட்டோவை சந்திக்கப் போவதாகத் தகவல்

இராவல்பிண்டி, டிச. 24—

வங்க தேசத் தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு இராவல்பிண்டிக்குக் கொண்டுவந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்; விரைவில் அவர், பாகிஸ்தான் அதிபர் பூட்டோவைச் சந்தித்துப் பேசுவார்.

லயால்பூரிலிருந்து நேற்று மாலை முஜிபுர் ரகிமான் விடுதலை செய்யப்பட்டார்; பின்னர், விமானம் மூலம் இசுலாமாபாத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்; அங்கிருந்து இராவல்பிண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் எங்கிருக்கிறார் என்ற விவரம், பாதுகாப்புக் காரணங்களையொட்டி இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது.

முஜிபுர் ரகிமானைச் சந்திக்கச் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது; அவர்கள் இன்று ரகிமானைச் சந்திக்கின்றனர்.

வங்க தேச விடுதலை விழா — இந்தியப் பாதுகாப்பு நாள்

26—12—71 ஞாயிறு மாலை 5-மணிக்கு
சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கில்

தலைவர் : மேயர் திருமதி காமாட்சி ஜெயராமன்

கலந்துகொள்வோர் :

கல்வி அமைச்சர்
நாவலர் இரா. நெடுஞ்செழியன்

சிலம்புச் செல்வர்
திரு. ம. பொ. சிவஞானம்

திரு. கோ. பூவராகன் எம்.பி.

திருமதி டி. என். அனந்தநாயகி எம்.எல்.ஏ.

திரு. திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.

சட்டமன்ற மேலவைத் தலைவர்
திரு. சி. பி. சிற்றரசு

சட்டப் பேரவைத் தலைவர்
திரு. கே. ஏ. மதியழகன்

டாக்டர் எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ.

திரு. ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ.

திரு. ஏ. எஸ். கே.

திரு. எம். ஆர். வெங்கட்ராமன் எம்.பி.

மாலை 4-மணிமுதல் 5-மணிவரை — காவல்துறையினரின் பாண்டு வாத்திய இசை. இரவு 7-மணிமுதல் 8-மணிவரை இசையமைப்பாளர் டி. ஆர். பாப்பா குழுவினரின் இன்னிசை.

நிகழ்ச்சி முடிவில் வாண வேடிக்கை உண்டு ! அனைவரும் வாரீர் !

—செய்தித் துறை

ஐந்து ஆண்டுகளாகப் பாகிஸ்தான் போட்ட திட்டம்

பதினன்கே நாட்களில் சுக்குநூருகத் தகர்ந்தது

இந்திய விமானப் படைத் தளபதி தரும் தகவல்

புதுடில்லி டிச 24—

"1966-ல் தாஷ்கண்ட் ஒப்பந்தம் செய்துகொண்டது முதற்கொண்டே மற்றுமொரு போருக்குப் பாகிஸ்தான் ஆயத்தம் செய்யத் துவங்கிவிட்டது; இதற்கு என்னிடம் தகுந்த ஆதாரம் இருக்கிறது"

என்று இந்திய விமானப் படைத் தலைவர் பி. சி. லால், பூனாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கடந்த 3-ம் தேதியன்று பாகிஸ்தான் விமானப் படை நம்மைத் திடீரெனத் தாக்கியதற்குச் சில மணி நேரத்திலேயே இந்திய விமானப் படை சரியான பதிலடியைக் கொடுத்ததாக அவர் தெரிவித்தார்.

அந்த முதல் தாக்குதலிலேயே பாகிஸ்தானின் 30 விமானங்களை இந்தியப் படை அழித்தது என்றும், இதனைச் சற்றும் எதிர்பார்க்காத பாகிஸ்தான் அதிர்ச்சியடைந்ததாகவும் அவர் கூறினார்.

அதிலிருந்து நடைபெற்ற 14 நாள் போரில், பாகிஸ்தான் விமானப் படை எதிர்த் தாக்குதலை நடத்தும் சக்தியை இழந்து — தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே ஈடுபட்டு வந்ததாகவும் அவர் கூறினார்.

"மீண்டும் பழிவாங்குவது குறித்துப் பேசிவரும் பாகிஸ்தான் தலைவர்களின் நோக்கம் நமக்குப் புரியவில்லை.

"நாம் விழிப்புடன் இருக்கவேண்டியது மிக அவசியமாகும்."

பட்ட அடி போதாதா?

பாகிஸ்தானுக்கு இந்திய தளபதி எச்சரிக்கை

உதாப்பூர், டிச. 24—

"பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்க மீண்டும் ஒருமுறை முற்பட்டால், அதற்கு இருமடங்கு பதிலடி கிடைக்கும்"

என்று இந்திய இராணுவத் தளபதி மானெக் ஷா இங்கு எச்சரித்தார்.

முனவர்தாவி பகுதியில் இராணுவ வீரர்களிடம் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

திருவாரூர் நகராட்சி மருத்துவமனை

கலைஞர் திறந்துவைக்கிறார்

திருவாரூர் சின்னபள்ளி வாசல் தெருவில் நகராட்சிக்காக திரு. வி. கே. கல்யாணசுந்தரம் அவர்களால் கட்டியளிக்கப்பட்டுள்ள மருத்துவமனையை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைக்கிறார்.

இவ்விழா 26—12—71 மாலை 4 மணிக்கு மன்னை ப. நாராயணசாமி தலைமையிலும் — அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் முன்னிலையிலும் நடைபெறும்.

திருமதி வி. கே. கே. அம்மணியம்மாள் அவர்களால் கட்டியளிக்கப்பட்டுள்ள மகப்பேறு இல்லத்தைக் கலைஞர் தலைமையிலும் — அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் முன்னிலையிலும் திருமதி மன்னை நாகம்மாள் நாராயணசாமி திறந்துவைப்பார்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ். ஜே. சாதிக்பாட்சா நிகழ்ச்சிகள்

டிச. 26 மாலை 5 மணி : இராமநாதபுர நகராட்சி வரவேற்பு; இரவு 7 மணி : இராமநாதபுரம்— வங்க தேச விடுதலை விழாப் பொதுக்கூட்டம்.

டிச. 27 மாலை 3 30 மணி : மதுரை—இரயில்வே மேம்பாலத் திறப்பு.

டிச. 28 காலை 10 மணி : அறந்தாங்கி—பேரூராட்சி மேநிலை நீர்த் தேக்கத் தொட்டி அடிக்கல் நாட்டு விழா; 11 மணி : அறந்தாங்கி—பேரூராட்சி டாக்டர் கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையத் திறப்பு; மாலை 3 மணி : அறந்தாங்கி— ஊராட்சி ஒன்றிய நிகழ்ச்சிகள்; 6 மணி : அறந்தாங்கி— தேசியப் பாதுகாப்பு வெற்றி விழா பொதுக்கூட்டம்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம் நிகழ்ச்சிகள்

டிச. 25 காலை 9-மணி : பைங்காநாடு—ஆசிரியர் குடியிருப்பு இல்லம் திறப்பு; 10-30 மணி : உள்ளிக்கோட்டை—கால்நடை பரிசளிப்பு விழா — உயர் துவக்கப் பள்ளிக் கட்டடக் கால்கோள் விழா — ஊராட்சி வரவேற்பு; நண்பகல் 12 மணி : மரக்கடை—மக்கள் நல்வாழ்வு நிலையம் பரிசளிப்பு விழா; மாலை 4-மணி : கோட்டூர்— ஊராட்சி ஒன்றிய நிகழ்ச்சிகள்; 6-30 மணி : மன்னார்குடி—வெற்றி விழாப் பொதுக்கூட்டம்.

டிச. 26 : திருச்சி—வங்க தேச விடுதலை விழா — இந்தியப் பாதுகாப்பு நாள் பொதுக்கூட்டம்.

டிச. 27 காலை : வடக்கூர்—மின் விளக்கு ஏற்று விழா — பள்ளிக் கட்டட அடிக்கல் நாட்டு விழா — ஒரத்தநாடு தாலுக்கா யூனியன் துவக்க விழா; காடவிராயன்பட்டி பள்ளித் திறப்பு; கோமாபுரம் மின் ஒளி வழங்குதல்; இரவு : திருவோணம்—பொதுக்கூட்டம்.

டிச. 28 காலை 10-மணி : அறந்தாங்கி—பேரூராட்சி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அடிக்கல் நாட்டு விழா; 11-மணி : அறந்தாங்கி—பேரூராட்சி டாக்டர் கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் திறப்பு; மாலை 3-மணி : முதல்— ஊராட்சி ஒன்றிய நிகழ்ச்சிகள்; 6-மணி : தேசியப் பாதுகாப்பு வெற்றி விழாப் பொதுக்கூட்டம்.

டிச. 29 காலை 9-மணி : கண்ணந்தங்குடி கீழையூர்—பள்ளிக் கட்டடத் திறப்பு; 10-மணி : தெலுங்கன்குடிக்காடு — பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 4-மணி : தென்னமநாடு— கூட்டுறவுக் கிடங்குத் திறப்பு — கழகக் கட்டட அடிக்கல் நாட்டு விழா; 5-மணி : பூவத்தூர்—மின் விளக்கேற்று விழா; 6-மணி : திருமங்கலக்கோட்டை மேலையூர் மின் விளக்கேற்று விழா; இரவு 7-மணி : திருமங்கலக்கோட்டை கீழையூர் —பொதுக்கூட்டம்.

சரணடைந்த எதிரிப் படைகள்

புதுடில்லி, டிச. 24—

வங்காளத்தில் இதுவரை 89,000 பாகிஸ்தான் துருப்புகள் இந்தியத் துருப்புகளிடம் சரணடைந்திருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தளபதி ஏ.ஏ.கே. நியாசி, மேஜர் ஜெனரல் பர்மன் அலி உட்பட அவர்களில் 5,000 பேர் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்.